நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
சென்னை–28

கு.கோ.எண்.11219/2021/எச்2

பொருள்: கோவிட் – 19 முதலமைச்சர் பொது நிவாரண நிதி – கொரோனா தொற்று நோய் தடுப்புப் பணியின் போது கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முன்கள அரசுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாகத் ரூ.25, 00,000/– வழங்கதல் –அறிக்கை கோருதல்–தொடர்பாக.

பார்வை: அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதம் எண்.14220/மாந–4/2021–1, நாள்.15.09.2021.

*****

பார்வையில் காணும் அரசுக் கடிதத்னைக் காண்க.

கோவிட் – 19 என்ற தொற்று நோய் தடுப்பு பணியின் போது கோரோன நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முன்கள அரசு பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக ரூ.25, 00,000/–முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதற்கு ஏதுவாக கீழ்க்கண்டி நிபந்தனைகள் /விவரங்கள் உறுதி செய்வதுடன் அவ்விவரங்களை உடன் அரசுக்கு அனுப்பும்படி பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் கோரப்பட்டுள்து. அதன் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. | கோரோனா நோய் தொற்று தடுப்புப் பணியில் பணிபுரிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் அதன் நகல் |
| 2. | கொரோனா நோய் தடுப்புப் பணி பணிபுரிந்ததால் உயிரிழப்பு ஏற்பட்டது என்பதற்கான துறைத் தலைவர்/அலுவலகத் தலைவரின் சான்று |
| 3. | கொரோனா நோய் தொற்று உறுதி செய்யப்பட்டதற்கான மருத்துவச் சான்று (இறப்பிற்கான காரணம் குறிப்பிடப்பட் வேண்டும். |
| 4. | கொரோனா நோய் பரவல் தடுப்புபு பணியில் முன்களப் பணியாளராக பணிபுாந்தாரா என்பதற்கான சான்று |
| 5. | கொரோனா நோய் பரவல் தடுப்புப் பணியில் ஈடுபட்டார் அல்லது முன்களப் பணியாளராக பணிபுரிந்தார் என சான்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும், கொரோனா நோய் பரவல் தடுப்புப் பணியின்போது கொரோனா தொற்று ஏற்பட்டதா என்பதையும் உறுதிப்படுத்தவும். |
| 6. | இறப்பு சான்று நகல் |

| | |
|---|---|
| 7. | வாரிசுதாரர் சான்றிதழ் நகல் |
| 8. | சான்றொப்பமிட்ட அசல் படிவங்கள் (Original Attested copies) |
| 9. | நிரந்தர பணியாளர் எனில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள், பணி நிரந்தரம் செய்யப்பட்ட விவரம் அல்லது தற்காலிக பணியாளர் எனில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் அதன் விவரம் (தினக்கூலி அடிப்படை/ஒப்பந்த அடிப்படை பணியாளர். |
| 10. | வருவாய் மற்றும் பேரிடர் லோண்மைத் துறையின் கடித எண்.16238/பே.மே.1(1), 2020–1, நாள்.10.08.2020 இல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளாரா என்ற விவரம் |
| 11. | துறைத் தலைவர் /அலுவலகத் தலைவரின் ஒப்புதல் |

அதன்படி, அரசுக் கடிதத்தில் கோரியுள்ள விவரங்களை சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றம் நகராட்சிகள் ஆணையர்களுக்கு அனுப்பி வைத்து உரிய ஆவணங்களை நேரில் சமர்ப்பிக்குமாறு கோரலாம்.

வரைவு ஒன்று ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.